செ.வெ.எண்: 164 நாள்: 10.03.2021

**மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை முதல்கட்ட சுழற்சி முறையில் பிரித்து அனுப்பும் பணிகளை மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள சட்டமன்ற தொகுதிகளுக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை முதல்கட்ட சுழற்சி முறையில் பிரித்து அனுப்பி வைக்கும் பணியினை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினர் முன்னிலையில் மாவட்ட ஆட்சியரகத்தில் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (10.03.2021) துவக்கி வைத்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் அவர்கள் தெரிவித்ததாவது.

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 06.04.2021 அன்று நடைபெற உள்ளது. அந்த வகையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் 6,65,376 ஆண் வாக்காளர்கள், 6,83,516 பெண் வாக்காளர்கள் மற்றும் 72 மூன்றாம் பாலினத்தவர்கள் சேர்த்து ஆக மொத்தம் 13,48,964 வாக்காளர்கள் 2021-ஆம் ஆண்டிற்கான இறுதி வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர். இந்த வாக்காளர்கள் வாக்களிக்க மாவட்டத்தின் மொத்தம் 1,902 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் இன்றையதினம் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளுக்கும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை வழங்கும் வகையில் கணினியின் மூலம் முதல்கட்ட சுழற்சி முறையில் செய்து, சம்மந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்களிடம் பிரித்து வழங்கும் பணி அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் வாக்குப்பதிவு இயந்திரத்தின் 3,401 பேலட் யூனிட், 2,331 கன்ட்ரோல் யூனிட், 2,482 விவிபேட் இயந்திரங்களும் முதல்கட்ட சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் சம்மந்தப்பட்ட சட்டமன்ற தொகுதிகளுக்கு எடுத்து செல்லும் வாகனங்களில் GPS கருவி பொருத்தப்பட்டு காவல்துறை பாதுகாப்புடன் அனுப்பப்பட உள்ளது. இந்த இயந்திரங்கள் சம்மந்தப்பட்ட தொகுதிக்குட்பட்ட கந்தர்வக்கோட்டை, இலுப்பூர், புதுக்கோட்டை, திருமயம் மற்றும் ஆலங்குடி வட்டாட்சியர் அலுவலகங்களிலும், அறந்தாங்கி சார் ஆட்சியர் அலுவலகத்திலும் அமைக்கப்பட்டுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திர பாதுகாப்பு அறையில் வைக்கப்பட உள்ளது.

இந்த மின்னணு வாக்குப்பதிவு இயந்திர பாதுகாப்பு அறையில் CCTV கண்காணிப்பு கேமரா, 24 மணிநேரமும் துப்பாக்கி ஏந்திய காவலர்கள், தீயணைப்பான்கள், கண்காணிப்பு பதிவேடுகள் உள்ளிட்ட பல்வேறு உயர் பாதுகாப்பு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த அறைகள் இரண்டு அடுக்கு பாதுகாப்பு முறையில் பூட்டி சீல் வைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.எல்.பாலாஜி சரவணன், மாவட்ட வருவாய் அலுவலர் பெ.வே.சரவணன், அறந்தாங்கி சார் ஆட்சியர் ஆனந்த் மோகன், இ.ஆ.ப., தேர்தல் நடத்தும் அலுவலர்கள் டெய்சிகுமார், தண்டாயுதபாணி, அக்பர்அலி, கிருஷ்ணன், கருணாகரன், துணை ஆட்சியர் (பயிற்சி) சுகிதா, உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினர் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**